**அறிவித்தல் இல. R/2026/01**

# மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III அல்லது பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களது CP/DEC/25 இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரைவைக் கூட்டத் தீர்மானத்தின் அடிப்படையில், மற்றும் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அவர்களின் NP/02/01/RECRUITMENT/GENERAL இலக்க 2026.01.06ம் திகதிய கோரிக்கைகளுக்கு அமையவும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் செயலாளரின் G/NPC/A15/Approval/2026/001 இலக்க 2026.01.05ம் திகதிய கடிதம் மூலம் அனுமதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதன் வகையிலும் மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பதவிக்கு அட்டவணை - **I** இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2026ம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2026.02.12** ஆகும்.

- **அட்டவணை – I**

| இல | பதவிப் பெயர் | பதவி இல | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் (Civil) **தரம் III** | **a** | 36 |
| 02. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் (Civil) **பயிற்சித் தரம்** | **b** | |

## 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 2013.06.01ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவைக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் 2016.02.12ம் திகதி கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டம் என்பவற்றில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் காலத்திற்கு காலம் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட செயல்வலுவிலுள்ள திருத்தங்களிற்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், கட்டளைகள், சட்டங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ளவாறு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பதவியின் தரம் III அல்லது பயிற்சித் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

02.2 திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III பதவிக்கான நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு **மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பதவி தரம் III இற்கு** ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் பயிற்சித் தரத்திற்குரிய நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பதவியின் பயிற்சித் தரத்திற்கு நியமிக்கப்படுவர். இப்பயிலுனர்களுக்கென குறித்தொதுக்கப்பட்ட பயிற்சிக்காலத்தின் முடிவின் பின்னர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டவாறு தகைமைகாண் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். இப்பரீட்சையில் சித்திபெற்றால் மட்டுமே இப்பதவியின் தரம் III இற்கான நியமனம் வழங்கப்படும்.

02.4 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

02.5 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவைநிலையத்தில் குறைந்தது **ஐந்து (05)** வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

02.6 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும், நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.7 திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை **அட்டவணை – I** இல் காட்டப்பட்டவாறு **முப்பத்தாறு (36)** ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :-

03.1 **மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III பதவிக்கானது :-**

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை **10/2025** க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2025** க்கு ஏற்ப **மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்)** பதவி தரம் - III ற்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா. **52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - 100,040/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

03.2 **மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பயிற்சித் தரம் பதவிக்கானது :-**

மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 2020.07.17ம் திகதிய திருத்த இல - 01 இல் விதித்துரைக்கப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016க்கு அமைவாக, அச் சுற்றறிக்கையின் **அட்டவணை - V** இன் அளவுத்திட்டத்திற்கு சமாந்தரமாகத் தற்போது நடைமுறையிலுள்ள 2025.03.25ம் திகதிய 10/2025ம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, **அட்டவணை - VI** இல் விதித்துரைக்கப்பட்ட வகையில் பயிற்சித்தர கொடுப்பனவாக 2026ம் ஆண்டுக்குரிய மாதாந்தப் படி ரூபா. **43,274/-** வழங்கப்படும்.

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04.3 எந்தவொரு மத அமைப்பிலும் நியமிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பரீட்சையெழுத தகுதி பெறமாட்டார்.

04.4 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

(***நேர்முகப் பரீட்சையின் போது** தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்)

*04.5* விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் **இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

*04.6* பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம், வடக்கு மாகாணம் அவர்களுக்கு முகவரியிடப்பட்டு எமக்கு பிரதியிடப்பட்ட வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A15/Approval/2026/001 இலக்க 2026.01.16ம் திகதிய அனுமதிக்கமைய, விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று **18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் :-

ஒவ்வொரு பதவிக்குமான கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் என்பன இவ்விளம்பரத்தின் **இணைப்பு - I** இல் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனது தகைமைகளுக்கு மிகவும் பொருத்தமான பதவிப் பெயருக்கு மட்டுமே விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

*06.1* இவ்விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவித்தல் எவையுமின்றி நிராகரிக்கப்படும்.

*06.2* எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், சேவைப்பிரமாணக்குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

*06.3* மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்வரிசை ஒழுங்கில் நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

*06.4* **எனினும்,** தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பதவியின் **தரம் III** இற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் **எஞ்சிய வெற்றிடங்கள் மட்டும் பயிற்சித் தரத்திற்கு** ஆட்சேர்ப்புச் செய்பவர்களூடாக நிரப்பப்படும்.

*06.5* சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய வெற்றிட எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்படும். யாதாயினும் ஒரு மாவட்டத்தில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக போட்டியிடுவதற்கு அம் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகுதி பெற்றவர்களாவர்.

(i) குறித்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையினை அதே மாவட்டத்திற்கு விண்ணப்பித்த தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களினால் நிரப்புவது சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் மாவட்டத்தின் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப மாகாணத்திற்குள் வரும் அடுத்துள்ள மாவட்டங்களுக்கிடையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை மீள்பகிர்வு செய்யப்படும்.

(ii) நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக இருப்பின் அக்காரணத்தினால் மாவட்டத்தின் சனத்தொகையை அடிப்படையாகக் கொள்ள முடியாதவிடத்து திறமை ஒழுங்கின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

06.6 மேலே குறிப்பிட்டவாறு ஆட்சேர்ப்புக்கு தெரிவு செய்யப்படுபவர்களுள், விசேட தேவையுடையோருக்கான (மாற்றுத் திறனாளிகள்) ஒதுக்கீடு, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 27/88 இற்கமைய கவனத்திற் கொள்ளப்படும். அவ்வாறு பரீட்சார்த்தியொருவர் நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது உடல், உள நிலைமைகள் தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

குறிப்பு :- விண்ணப்பதாரி மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு நிலைமையின் கீழ் உரியவாறு விண்ணப்பிக்கின்றார் என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அங்கவீனமற்ற ஆள் ஒருவர் அங்கவீனமுற்ற ஆளொருவராக அவராகவே கருதக் கூடாது.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500/- ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/214"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

08.4 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

08.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 221 9939 / தொலைநகல் இல: 021 221 9940 / மின்னஞ்சல்: **exampscnp@gmail.com)**

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## 09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

09.1 பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

09.2 மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா. 854,880.00/- க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நெருங்கிய உறவினர் அல்லாத நிரந்தர அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

**மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் (Civil) தரம் III அல்லது பயிற்சித் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.**

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான **இரண்டு (02)** வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் இவ் எழுத்துப் பரீட்சையில் தோற்றும் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் வினாத்தாள் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்புப் பரீட்சை | இவ்வினாத்தாளானது விமர்சன ரீதியான காரணங்களை பரீட்சார்த்திகள் அணுகும் திறன், தீர்மானமெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு செய்யும்திறன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பரீட்சை | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் கட்டட நிர்மாணம் பற்றிய அடிப்படை அறிவு, கட்டடத்திற்கான மூலப்பொருட்கள், கட்டுமான வேலைக்குரிய வரைவு (Plan) தயாரித்தல் மற்றும் வரைவை (Plan) விளங்கிக் கொள்ளுதல், அளவீடுகள், அடித்தளம், மண்ணின் வகைகள், வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, மதிப்பீடுகளைத் தயாரித்தல், நீர் விநியோகம், வடிகால் அமைப்பு மற்றும் குப்பைகள் / கழிவுகளை அகற்றுதல் ஆகியவற்றின் அறிவினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும். | 03 மணித்தியாலங்கள் | 100 |

**குறிப்பு :-**

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

## 13. பரீட்சைப் பெறுபேறுகள் :-

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் **www.np.gov.lk → Exams & Recruitments → Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமெனஎதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2026.01.23

## கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்

| தொ இல | பதவிப் பெயர் | கல்வித் தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|---|
| 01. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**அத்துடன்**<br><br>(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் கணித பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் உள்ளடங்கலாக **மூன்று (03)** பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>(ii) க.பொ.த (உ/த) பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்துறையில் பொறியியற் தொழினுட்பவியல், தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **மூன்று (03)** பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். | (i) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br><br>**அல்லது**<br>(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br><br>**அல்லது**<br>(iii) கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br><br>**அல்லது**<br>(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br><br>**அல்லது**<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் குடிசார் (சிவில்) பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்.<br><br>**அல்லது**<br>(vi) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) துறை தொடர்பான தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் - 6 இனை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>**அல்லது**<br>(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களின் கருத்துக்களின் அவதானிப்பின் அடிப்படையில் மேற்படி தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பவியல் தகைமைகள். |
| 02. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) பயிற்சித் தரம் **(பயிற்சிக் காலம் 01 வருடம்)** | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**அத்துடன்** | (i) மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (NCT) (சிவில்) பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது** |

| | | | |
|---|---|---|---|
| | | (i) க.பொ.த (உ/த) பரீட்சையில் கணித பாடத்துறையில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் உள்ளடங்கலாக **மூன்று (03)** பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>(iii) க.பொ.த (உ/த) பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்துறையில் பொறியியற் தொழினுட்பவியல், தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக **மூன்று (03)** பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். | (ii) மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்துறை தொழில்நுட்பவியலாளர் துறையில் உள்ள விண்ணப்பிக்கும் பதவிக்கு பொருத்தமான தேசிய சான்றிதழ் பாடநெறியினை (NCC) (சிவில்) திருப்திகரமாக பின்பற்றி உரிய சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>(iii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களின் கருத்துக்களின் அவதானிப்பின் அடிப்படையில் மேற்படி தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பவியல் தகைமைகள். |

குறிப்பு :-

01. திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் **பயிற்சித் தரத்திற்கு (குடிசார்)** ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள், ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் சேவைப்பிரமாணக் குறிப்பு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய, பயிற்சிக் காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்து அதன் பின்னர் இடம்பெறும் பரீட்சையில் சித்திபெற்றதனை நிரூபிக்கும் தொடர்புடைய நிறுவனத்தினால் வழங்கப்படும் பெறுபேற்றினை சமர்ப்பித்ததும் **தரம் III** இற்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்படுவர்.

02. அவ்வாறு பயிற்சியின் நிறைவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுனர்களுக்கு, அவர்களுடைய பயிற்சிக்காலத்தினை மேலும் **ஆறு (06)** மாதங்களுக்கு மேற்படாமல் நீடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். நீடிக்கப்பட்ட பயிற்சிக் காலத்தின் இறுதியில் மீண்டும் நடைபெறும் பரீட்சையில் சித்திபெறாத திறந்த போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுனர்களின் சேவையானது முடிவுறுத்தப்படும்.